
உடற்பயிற்சி

2-வது மகாநாடு, புதுக்கோட்டை



மகாநாட்டுத்தலைவர்

சாண்டோ

R. இலக்குமணய்யர் அவர்கள்

முன்னுரைப் பிரசங்கம்

(24-9-38.)

புதுக்கோட்டை

உடற்பயிற்சி 2-வது மகாநாட்டுத் தலைவர்

சாண்டோ R. இலக்குமணய்யரவர்கள்

முன்னுரைப் பிரசங்கம்.

(24—9—38)

பெரியோர்களே! சகோதரி—சகோதரர்களே!!

இம் மகாநாட்டின் தலைமைப்பதவியை எனக்களித்துக் கௌரவித்ததற்கு உங்கள்பால் மிக நன்றியுடையேன்.

வந்த நோயைப் போக்கவும், நோய் வாராமற் தடுக்கவும், சோர்வு, பலவீனம், தளர்ச்சி இவைகளைநீக்கவும், அற்பாயுள், ஆரோக்கியமின்மை, ஊக்கமின்மை, ஆண்மையின்மை, அழகின்மை, பலமின்மை இவைகளைத் தொலைக்கவும், தாங்கமுடியாத சிசு மரணம், அளவற்ற பிரசவ மரணம், அளவில்லாத அகால மரணம் இவைகளை அகற்றவும், இம்மகாநாட்டினால் இம்மாதிரி பிரசாரத்தினால் ஓரளவு பிரயோஜனம் உண்டென்றால் அதனை ஆதரிப்பது நமது கடமையாகும்.

சுகாதாரம், சிறப்பாக உடற்பயிற்சி இவைகளை நம் நாட்டு மக்கள் போதிய அளவு கவனிக்காததாலேயே, மேற்சொன்ன குறைபாடுகள் நமது நாட்டில் மிகுந்து தோன்றலாயின. இது விஷயத்தில் பொது ஜன உணர்வு மிகுந்து, செயலில் கொண்டுவரத்தக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டு கிளர்ச்சி செய்து, தேச நிர்வாகிகள், நாட்டு நலம் நாடுவோர், அறிஞர்கள், பிரபுக்கள் போன்றோர் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். இம்மாதிரி மேல் நாட்டினர் செய்ததால் தான் இது விஷயத்தில் அவர்கள் எவ்வளவோ முன்னேறி விட்டார்கள்.

இயற்கையின் போக்கின்படி உண்மையான உடற்கட்டை நல்கி, உயரிய கம்பீர உருவத்தை உண்டாக்கி, அசைக்க முடியாத ஆரோக்கியத்தை அளித்து, ஆண்மையை மிகுத்துக்கொடுக்கும் அற்புத

ஆற்றல் வாய்ந்த உடற்பயிற்சிக் கலையை வளர்க்கும் இந்த மகா நாட்டின் பெருமையை, எத்தனை பேர் உள்ளவாறு உணர்ந்திருப்பார்கள்!

அன்பர்களே! உடற்பயிற்சி சாஸ்திர சம்பந்தமானது. இயற்கைக்கியைந்தது. ஆரோக்கியத்தில் அதிக இடம் பெற்றது. இதனை அறிவு படைத்த எவரும் ஒப்புக்கொள்வர். வளமுற்ற தசை, உயர்ந்த தேகக்கட்டு, தேவைக்குரிய பலம் இவைகளை உடற்பயிற்சியே நமக்கு அளிக்க முடியும். இன்று மக்களது தேக அமைப்பில் இதர சாதனங்களால் இவைகளைப்பெற முடியாது. வேறு விளையாட்டுகளும் இந்நிலைமையினை நல்காது.

இன்று பள்ளிக்கூட மாணவர்களும்,ஆசிரியர்களும், அவர்களின் நிர்வாகிகளும், டிரில் அல்லது கவாத்தைப்பற்றிப்பேசுவதோடு நின்று விடுகிறார்கள். அல்லது வாரத்திற்கொரு முறை,இரு முறை பெயரளவில் கையைக் காலை நீட்டிவிடுகிறார்கள். விளையாட்டைப் பற்றி பிரமாதமாய்ப் பேசுகிறார்கள். இவைகள் உடற்பயிற்சியின்பாற் பட்டன அல்லவா என்றும் கேட்கிறார்கள். அரசாங்கத்தாரும், நிர்வாகிகளும்கூட இதற்கு ஒத்து துகிறார்கள். ஆயினும், பயனில்லை. மாணவன் பள்ளியை விட்டு வெளியேறும்போது பார்த்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். ஆசிரியர்கள், போத்தலும் கையுமாக மாத்திரைகளை விழுங்கி ஏப்பமிட்டு, உழுத்த தேகத்துடனும்ஓட்டை மனத்துடனும் உயிருடன் போராடி வாழ்வது நமக்குத் தெரியாதா?

உடற்பயிற்சியின் உண்மையான நோக்கம் முதலாவது சுத்த ஆரோக்கியத்துடன் வாழ்வதாகும். அதாவது நோயைத் தடுத்து வராமற் பாதுகாப்பது. இன்று பள்ளி மாணவர்களில் 100-க்கு எத்தனை பேர் நோயை எதிர்க்கும் சக்தி பெற்றிருக்கிறார்கள்? இரண்டாவது ஆரோக்கியமான அஸ்திவாரத்தின் மேல் உறுதியான உடற்கட்டை உண்டாக்கிக்கொள்வது. இதனைத்தான் நாம் அழகென்று சொல்லுகிறோம். பாதம் முதல், சிரம் வரையிலுள்ள எல்லாத் தசைப் பகுதியினையும்,உறுப்புகளையும் சமமாய் வளர்த்துப் போஷிக்கும் தன்மையினையுடைய அப்பியாசங்களையே நாம் உடற்பயிற்சி என்று கூறுவோம். மற்றவைகளை அரை குறைப் பயிற்சிகள் என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஆகவே, பள்ளிக்கூட உடற்பயிற்சிகள் சாஸ்வதமான ஆரோக்கியத்தையும்,அழகையும் அளித்திருக்கின்றனவா? உடலின் தேவை

களை அவைகள் பூர்த்தி செய்திருக்கின்றனவா? அதற்குரிய ஞானத்தைப் பள்ளிகள் அளித்திருக்கின்றனவா என்று உங்களைக் கேட்கின்றேன். இந்த உண்மையைப் பரிசோதிக்க வேண்டுமானால் திறந்த உடம்பில் அவர்களைப் பாருங்கள். வாட்டம் தெரியாமற் போகாது. உடல்வளம்,உடற்கட்டு, இந்த இரண்டு வகுப்பிலும் நாம் தேறிவிட்டால், வாழ்வைச்சோர்வின்றி நடத்தும் நிர்வாகத்திற்குரிய சக்தி விஷயத்திலும் நாம் நிச்சமாய்த் தேறிவிடுவோம்.

சோதரிகளே! சோதரர்களே!! நாம் பேச்சைக் குறைத்து, செயலை வளர்க்க ஆசைப்படவேண்டும். உடற்பயிற்சி விஷயத்தில் அரசாங்கச் சட்டம்,நிர்வாகக் கட்டுப்பாடு,வழக்கம்,வாழ்க்கைத் தொந்தரவுகள் இடந்தரவில்லை என்று வீண் சாக்குகள்சொல்லவேண்டாம். நீங்கள் மனம் வைத்தால் போதும். ஆரோக்கியம், அழகு, பலம் இவைகளையடைய எத்தகைய முறைகள் அநுபவத்திலும் அனுகூலத்திலும்முந்துகின்றனவோ,அவைகளைக்காலந்தாழ்த்தாமல்கைக்கொண்டு பிறநாட்டார்போல் உயர்ந்த பயனை, எளிதாயும் சீக்கிரமாயும் அடையவேண்டும். அரசாங்கம் மூலம் இதற்கு உறுதுணை தேடவேண்டும். அரசாங்க நிர்வாகிகள் பழைய பல்லவிகளையே பாடுவார்களானால், நல்லமுறைகளை ஏற்படுத்தித்தர வீண் புகார்கள் எதையேனும் கூறிக்கொண்டிருப்பார்களானால், தனித்த முறையில் தெருவெல்லாம் உடற்பயிற்சிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். பெண்களுக்கென்றும் ஆண்களுக்கென்றும் பல உடற்பயிற்சிப் பள்ளிகள் நிறுவவேண்டும். குழந்தைகள் முதல் வயோதிகர்கள்வரை யாவரும் செய்யத் தகுந்தவாறு, நிலைமைக்கேற்றதுபோல், உடற்பயிற்சி வகுப்புகள் இருக்கவேண்டும். ஆனால், அவைகள் உயர்ந்த பலனை எளிதில் தரவேண்டும். தாமதம் வேண்டாம். அன்பர்களே! எல்லாத் தருமங்களிலும் மனிதனை மனிதனுக்கும் இத்தர்மம் மேலானது. கடவுளுக்குச் சம்மதமானது. மக்கள் நோய்ப்படாமல், உடலைப்பாது காத்து, திடகாத்திரர்களாகித் தங்களுக்குத் தாங்களே உழைத்துண்டு வாழும் படியாகச் செய்யும் தருமம், சத்திரங்கள் கோவில் கட்டுவதிலும் பிறதானங்களிலும் மேலானது. குறைபாடுள்ள மனிதனால் நல்லறங்களை நாட்டில் வளர்த்துப் பாதுகாக்க முடியாது. பிச்சை எடுத்தேனும் இத்தகைய முயற்சிகளின் பயனை மக்கள் அடையும்படி செய்யுலாம்; அது கேவலமாகாது.

உடற்பயிற்சியில் பலவிதங்களிருக்கின்றன. விளையாட்டுகளில் பலவிதங்களிருக்கின்றன. எல்லாவித விளையாட்டுகளும், பயிற்சிக ளும் ஒரே மாதிரிப் பலனையளிப்பதில்லை. சத்தற்ற உணவுகளை உண்ணும் ஒருவன் எப்படி வாடி, வதங்கி, சிறுத்து, வளர்ச்சியிற் குன்றிக் காணப்படுகிறானோ, அதேபோல பயனற்ற பயிற்சிகளை எவ் வளவு நாள்கள் செய்யினும் பலன் பெற முடியாது. அவ்விதம் பய னளிக்காத தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத பயிற்சி முறைகள் சாஸ்திர சம்மதமானதென்று, எவ்வளவு வானமளாவப் புகழ் பாடி னும் அவைகள் பிரயோஜனமற்றவைகள் என்பதை நீங்கள் உணர வேண்டும். உடற்பயிற்சி ஆசிரியர்களின் மதி இங்கே பெரிதும் கவனிக்கத்தக்கதாகும். நிலைமைக்கேற்றவாறு, குழந்தைகள், இளம் வயதினர், நடுத்தர வயதுடையவர்கள், முதியோர்கள் யாவரும் சீக்கிரம் பயனடையத்தக்கதாயும், எளிதில் செய்யக்கூடியதாயுமுள்ள அப்பி யாஸ முறைகளை வகுத்துத் தருவதில் ஆசிரியர்கள் நிபுணர்களாயி ருக்கவேண்டும். அல்லாமல், அவர்கள் ஆரோக்கிய சாஸ்திர விற்பன் னர்களாகவுமிருக்கவேண்டும். நோய்களை உடற்பயிற்சியாலும் இயற்கை முறைகளாலும் சொஸ்தம் செய்யும் ஆற்றல் படைத்தவர்களாயு மிருக்கவேண்டும். பொதுவாகச் சொல்லப்போனால் மேல் நாட்டின ரைப்போல விஞ்ஞான ரீதியாய் உடற்பயிற்சி புகட்டுவதில் வல்லு நராயிருக்கவேண்டும். அத்தகையோர் படித்துப் பட்டம் பெற்றவ ராயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பொது ஜனங்களும் அர சாங்கத்தாரும் ஆதரிக்கவேண்டும். அப்படியானால் இவ்வியக்கம் நாட்டில் வெகு விரைவில் பரவும்.

உடற்பயிற்சியில் பகட்டும் படாடோபமும் காட்டக்கூடிய கற் றுக் குட்டி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். கத்திக் குத்து அல்லது தடியடிப் பிரயோகம் செய்யக்கூடிய ஆசிரியரும் உண்டு. எடுத்த தற்கெல்லாம் உதை அல்லது அடி கொடுக்கும் ஆசிரியருமுளர். போக்கிரித்தனமான காரியங்களுக்கே தங்கள் உடற்பயிற்சித்திறமை யைக் காட்டுவோர் அநேகர். எடுத்ததற்கெல்லாம் போட்டி, வா, ஒரு கை பார்ப்போம் என்று மிரட்டித்திரியும் பயிற்சியாளர் ஒரு வகை. நான் பலசாலி, என்ன செய்வேன் தெரியுமா? சாறாய்ப் பிழிந்து சக்கையாய் ஊதிவிடுவேன் என உருட்டிப்பணம் பறித் துண்போர் வேறொரு வகை. ஆடையலங்காரம், தலையலங்காரம், கிரீச் மிதியடி, மார்பை முன் தள்ளி தோள்களைப் பின்தள்ளி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே விரைப்புடன் நடத்தல் இதோர்

வகை. சட்டைகளை ஒன்றின்மேல் ஒன்ருகப் போட்டுக் கனமாய் உடம்பைக் காட்டும் சாண்டோக்கள் ஒரு வகை. ஒருவரை ஏமிழுட்டுப்பெயர்கள் மறைவிலிருந்து பிடித்தடித்து கம்பி நீட்டுவது ஒரு வகை. உடைந்தவை,ஒடிந்தவைகளைக்கொண்டுபுரட்டுப்பித்தலாட்டத்தின்மேல் சாண்டோ வேலைகள் காட்டி சம்பாதிப்போர் ஒரு வகை. ஆட்டுக்கறியைப் பச்சையாகத் தின்பேன், பத்து சேர் அல்வாவை அப்படியே விழுங்குவேன்,பச்சைக்கடலையைப்படி படியாய்ச் சாப்பிடுவேன். இப்படிப்பட்ட சாப்பாட்டு ராமன்கள் ஒரு வகை. சஞ்சாத்தம், மாமாவேலை, திருட்டு, கலகம், வம்பளத்தல், மோசம் இது போன்றதோர் வகை. எளியவர்களையும், வலிமையற்றவர்களையும் பயமுறுத்திப் பணம் பிடுங்குவதோர் வகை. இன்னும் பலவகை. இவர்களெல்லாம் உடற்பயிற்சி ஆசிரியர்கள் அல்லது உடற்பயிற்சியாளர்கள். இதற்காகவா உடற்பயிற்சிக் கலைகள் அபிவிருத்தியாக வேண்டுமென விரும்புகிருேம்? இத்தகைய வீரத்தை உபயோகிப்பதற்கா உடற்பயிற்சிக் கலைகள்? இதுவா வீரம்? மானத்தைக் காக்கவும்,தேசத்தைக் காக்கவுமன்ருே வீரம்? இத்தகைய படிப்பற்ற மூடமான, முரட்டுத்தனம் வாய்ந்த பயில்வான், அல்லது வஸ்தாதுகளைப் பொதுமக்கள் எப்படி நம்பித்துணிவார்கள்? இவர்களைச் செல்வர்களும், அறிஞர்களும் எங்ஙனம் மதிப்பார்கள்? இதனாலன்ருே இவ்வருங்கலைகள் காலக்கிரமத்தில் அழிந்தொழியும் நிலைமைக்கு வந்துவிட்டன. 64 கலைஞானங்களில் பெரிதும் இடம் பெற்றிருந்த இக்கலைகள் இன்று என்ன நிலைமையிலிருக்கின்றன?

அன்பர்களே! இவைகளைப்புதுப்பிக்க வேண்டும்; புனருத்தாரணம் செய்யவேண்டும். இதற்குப் பள்ளிக்கூடங்கள் ஏற்றவைகள். இது பற்றி நிபுணர்கள் சொல்லும் யோசனையை நிர்வாகிகளும், ஆசிரியர்களும் நன்காராய்ந்து வேண்டுவென செய்யவேண்டும். வெளியிலிருப்பவர்கள், ஸ்தாபனத்திற்குச் சம்பந்தமில்லாதவர்கள், நமக்கென்ன ஆலோசனை கூறுவது என்ற அலட்சியமும்,இறுமாப்பும் கூடாது. இதனால் மக்கள் முன்னேற்றம் தடைப்படும் என்பதை அவர்கள் கவனிக்கவேண்டும். அறிவுக்கும் அநுபவத்திற்கும் இயற்கைக்கும் பொறுத்தமானவைகளை அவர்கள் ஏற்கவேண்டும். மேலதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். நல்லதைச் செய்ய ஏன் தயங்கவேண்டும்? இப்படி அவர்கள் செய்யாவிட்டால் அது அறியாமை மிகுந்த அகந்தையின்பாற் பட்டதாகும்.

பெண் மக்களும் கேவலமான உடலமைப்பில்தானிருக்கிருர்கள். சவுக்கார மிட்டு முகத்தைக் கழுவுவதையும், பவுடர்ப் பூசிக்கொள்வதையும், துணிமணிகளால் அலங்கரித்துக்கொள்வதையும் அவர்கள் அழகெனக்கருதி இருக்கிருர்கள். எலும்புந் தோலுமான அவலட்சண உருவத்திற்கு வயிர நகைகளை வேண்டுமானுல் போட்டு அழகு

பார்க்கட்டும்; அவலட்சணம் அவலட்சணந்தான்! பொதுவாகப் பெண் மக்கள் வாழ்விலே, அவர்கள் நடையிலே, அவர்கள் செய்யும் காரியங்களிலே ஒரு சோர்வு இருப்பதை நுணுகி ஆராயும் எவரும் கண்கறிவர். ஞானம்,நல்லறம், வீரம், சுதந்திரம் இவைகளைப் பேணி, உண்மை அழகு என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் இயற்கை முறைகளில் அவர்கள் கவனம் திருப்பப்படவேண்டும். அவர்கள் திடகாத்திரராய் இல்லாதவரை அவர்கள் வீரமுள்ள மக்களைப்பெற முடியாது. இது விஷயத்தில் மேல்நாட்டுப் பெண்டிர்களைப்போல முயன்று ஆரோக்கியம்,தேகக்கட்டு,நிர்வாக சக்தி முதலியவைகளைப்பெற முயற்சிக்க வேண்டும். மேல்நாட்டுப் பெண்கள் அழகு வளர்ச்சிக்கெனவும் உடற்பாதுகாப்புக்கெனவும் தங்களுக்குத் தாங்களே சங்கங்களை உற்பத்திச் செய்துகொண்டு உடலைப்பாதுகாத்து வருகிறார்களென்பதை நீங்கள் அறிவீர்கள். அதுபோல நமது பெண்களும் செய்து கொள்ள வேண்டும். தங்கள் மக்களைச் சரியான முறையில் வளர்க்க அவர்கள் தெரிந்திருக்கவேண்டும். அதற்குரிய சந்தர்ப்பங்களை நாம் அவர்களுக்கு அளிக்கவேண்டும்.

இந்த மகாநாடு தோன்றக் காரணஸ்தராயிருந்த சோமசுந்தரரைப்பற்றி சில வார்த்தைகள் கூறவிட்டால் அது நன்றியின்பாற்பட்டதாகாது. ரோஜாச்செடி தன்னிடமுண்டாகும் புஷ்பத்தைப் பற்றி மதிப்பதில்லை. ஒரு புஷ்பம் மண்ணில் விழுந்து மக்கிமாளும்; மற்றொன்று அரசி (கூந்தல்) முடிமேல் வைத்து மதிக்கப்படும். கடலிலுண்டாகும் சிப்பி முத்துக்களில் ஒன்று மண்ணில் புதைந்து தன்மை கெடும்; மற்றொன்று அரசர் முடியில் பதிக்கப்பட்டு தன்மையில் பிரகாசிக்கும். இதேபோல செல்வச்செட்டியார் ஸமூகத்தில் பிறந்த சோமசுந்தரரைப் பிற ஸமூகத்தார் மதிப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இன்று தோன்றியுள்ள உடற்பயிற்சிக் கலைநிபுணர்களில் அன்பர் சோமசுந்தரமும் ஒருவராக வைத்தெண்ணப்படத் தகுந்தவர். ஆதலின் இனி நாம் அவரை ஆசிரியர் சோமசுந்தரம் என்றே அழைக்கவேண்டும். அவருக்கு உடற்பயிற்சிக்கலையில் நுண்ணிய மதிப்புண்டு. நெருங்கிப்பழகிய உற்ற நண்பர்களும் அறிஞர்களும் இக்கலை சம்பந்தமாக அவரை மதிக்காமலிருக்க முடியாது. அவராலன்றோ இம் மகாநாடு உருவாகியிருக்கிறது. இதற்கு முன் தமிழ்நாட்டிலே கண்டிராத பலசாலிகள் மகாநாடும் உடற்பயிற்சி மகாநாடும் அவரால் பிறந்தவைகள். அதன் பயனாக தமிழ் நாட்டிலே உடற்பயிற்சி வளர்ந்து வருகிறது உண்மை. வெளியிலேற்படும் சிலசிறு வெறுப்புகளுக் கிலக்காகாமல் காலக்கிரமத்தில் எல்லா விஷயத்திலும் சமநோக்கோடு நடக்கும் திறமை அன்பர் சோமசுந்தரரிடம் உண்டு. கால நிலைமையில் எல்லாப்புகாரையும் சமாளிக்கும் ஆற்றலும்,பொது அறிவும் அவரிடமுண்டு. நேர்மை,

உண்மை, உறுதி யாவும் அவரிடமுள்ளன. காலத்தை எதிர்நோக்கு கிறார். தமது காரியத்தில் அவர் ஜெயமடைவது நிச்சயம்.

அல்லாமல், அவரது அரிய சேவையையும், உடற்பயிற்சிக்கலை நுணுக்கங்களையும் தமிழ் நாட்டார் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல், காலத்தே பெறும் பெரிய பாக்கியத்தை இழந்தவராவோம். அல்லாமல், அவரது உண்மைச்சரிதம் உள்ள வாறு வெளிவந்தால் உங்களை உவகைக் கடலிலாழ்த்தும். அவரது வீரச்செயல்கள் உங்களைத் திடுக்கிடச்செய்யும். அவரைச் சரியாக அறிந்துகொள்ளும் காலம் விரைவில் வரப்போகிறது. இன்றைய நிலையில், பலம் சம்பந்தப்பட்டவரையில், அவரைப்பல இளைஞர்கள் போட்டிக்கழைக்கலாம். வளரும் பலத்தையுடைய இளைஞர்களுடன் அவர் போட்டிபோட முடியாதென்பதை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால், மையம் சருவின இந்த வயதில், அவர் செய்யும் பலத்தொழில் களை, அவரினும் 25-வயது தாழ்ந்த எந்த இளைஞர்களும் செய்யக்கூடு மானால் முன் வரட்டும் என்று நான் அறைகூவுகிறேன். அவரது இளமைப்பருவத்தில் 13-வருட காலம் செட்டிமார் நாட்டில், ஏன்? வெளி ஜில்லாக்களிலும்கூட 150 பவுண்டுகனம் தூக்கக்கூடியவர்கள் அபூர்வம் என்பதை நீங்கள் அறியவேண்டும். இன்று தமிழ் நாடு இது விஷயத்தில் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு அவர் ஒரு பெருங் காரணம் என்பதையும் நாம் மறத்தல் கூடாது.

இன்னும் நாம் அவரைப்பற்றிச் சரியாகத்தெரிந்து கொள்ள வேண்டுமானால், தியாகம்! தியாகம்!! தியாகம்!!! அம்மம்ம! எத் தனை ஆயிரமுறைகள் சொல்லினும் பொருந்தும். நினைக்க முடியாத எண்ணிக்கையற்ற கஷ்டங்கள், பயங்கரமான திடுக்கிடும் அபாயங்கள், பிறர் தூற்றும் புன் மொழிகள், ஓய்விலா உழைப்பு, அறிவும், செய லும் கலந்த தியாகம்! அத்தகைய ஒரு சோமசுந்தரன், மேல் நாட் டில் பிறந்திருந்தால் சிலை செய்து நிறுத்தி வணங்குவர்.

பலக் காட்சிகளிலும், பலப் போட்டிகளிலும் வித்தியாசங்கள் இருக்கின்றன. இன்று குமாரகோஷ் எண்பது மணி நேரம் நீந்தும் ஆற்றல் படைத்தவர். இவரால் 200 பவுண்டு கனம் தூக்கமுடியு மென நீங்கள் நம்புகிறீர்களா? 200 பவுண்டுகள் தூக்கக்கூடிய ஒருவர் குமாரகோஷ் வேலையை ஒரு பகுதியேனும் செய்துமுடிக்கஇயலுமா? படிப்பில் பல பகுதிகள் இருப்பதுபோல பயிற்சி விதங்களிலும் பல பகுதிகள் இருக்கின்றன. எந்தப்பகுதியில் யார் உரியவாறு தேர்ச்சி பெற்றிருக்கிறார்களோ அவைகளுக்கேற்றவாறு நாம் மதிப் புத்தரவேண்டும். இல்லையேல் கலைகள் வளரா.

நமது ஜன சமூகத்தின் ஜீவசக்தி தற்காலம் தாழ்ந்திருப்பது போல் வேறு எக்காலத்திலும் தாழ்ந்திருந்த தில்லை. இத்தாழ்மைக்

கும், வறுமைக்கும் சவாப்தாரி யார்? அறிஞர்களா? செல்வர்களா? அரசாங்கமா? ஜனத்தலைவர்களா? எவராயிருந்தாலும் சரி; கடந்த கால நடைமுறைக் குற்றத்தைப் பிரஸ்தாபிப்பதில் எதிர்பார்க்கும் பயன் முழுதும் நமக்குக் கிடைக்கப்போவதில்லை. பயன் கிடைக்கும் வண்ணம் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தாக வேண்டும்.

தற்போது இவ்வியக்கத்திற்கு முக்கியஸ்தானங்களாயுள்ளவை பத்திரிகைகளும் பள்ளிக்கூடங்களுமாகும். பத்திரிகை ஆசிரியர்கள் இதுபற்றி நன்குகவனித்து தங்கள் தங்கள் பத்திரிகையில் இதற்குப் பிரதான இடம் ஒதுக்கித்தரவேண்டும். இம்மாதிரி விஷயங்களைப் பிரசுரிப்பதில் ஆசிரியர்கள் ஆர்வமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இது விஷயத்தில் பொது மக்கள் கவனம் திரும்புமாறு உணர்வுண் டாக்கும் சித்திரங்களும் வெளிவரவேண்டும். மக்கள் நன்மைக்கு உழைக்கும் பத்திரிகைகள் இது விஷயத்தில் அலட்சியம் செய்யக் கூடாது. பொதுவாகச் சொல்லப்போனால் பத்திரிகைகள் இதற்கு முக்கியஸ்தானம் அளிக்கவேண்டும். அப்படி இடமளித்து வரும் பத்திரிகைகளை நாம் போற்றுகிறோம். இன்னும் இதுபற்றித் தமிழ்ப் பத்திரிகாசிரியர்கள் முக்கிய சிரத்தை எடுத்துக் கொள்ளுதல் அவசியமாகும். மேல் நாட்டில் இதற்கெனத் தனிப்பத்திரிகைகள் உள்ளன. நம் நாட்டில் தோன்றுவதும் மறைகின்றது. இதற்கு உடற்பயிற்சியிலேற்பட்டுள்ள மந்தம்தான் காரணமாகும். இது விஷயத்தில் ஆசிரியர்களும் அப்படித்தான். அதனால்தான் ஆசிரியர்களுக்கும் இவ்விஷயம் ருசிப்பதில்லை: ஆனால், இப்போதுவெளிநாட் டுச்செய்திகள் ருசி ஊட்டிவருகின்றன.

மேலே நாம் கோரும் நலன்களை விடாமுயற்சியினாலும் ஒத் துழைப்பினாலுந்தான் பெற முடியும். முதலில், இதற்குரிய ஞானத்தை நமது ஜன சமூகம் அடைவதற்குரிய எல்லா ஏற்பாடு களையும், உற்சாக மூட்டத்தக்க ருசிகரமான வழிகளில் செய்தாக வேண்டும். இதற்கு இம்மாதிரி முயற்சிகள், பிரசாரங்கள் பயன் தருவன என்பதில் ஐயமில்லை.

எனது உள்ளக் கிடக்கையை உள்ளவாறு எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் அளித்த இந்த மகாநாட்டு நிர்வாகிகளுக்கும் உங்களுக் கும் மீண்டும் எனது தாழ்மையான வணக்கம் உரியதாகுக!

சுபம்! சுபம்! சுபம்!!!

சிவம் பிரஸ்

திருச்சி.